2017 ஜூன் 15]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியில் உள்ள சாலைகள் 15 வருடங்களாகப் பராமரிப்பு செய்யப்படவில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய குறிப்பினை எங்களுக்கு அனுப்பினால், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கலந்து, அந்தச் சாலைகளைச் சீரமைக்கத் தேவையான நிதியாதாரங்களைப் பொறுத்து, விரைவான நடவடிக்கை எடுப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

துணை மின் நிலையம்

***2104—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் மற்றும் திருமுக்கூடல் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்தினை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு உத்திரமேரூர் மற்றும் திருமுக்கூடல் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

[2017 ஜுன் 15

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுதும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் துணை முதல்வராக இருந்தபொழுதும்தான் (குறுக்கீடு) உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஆகிய இந்த இரண்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் அளவுக்கு மீறிப் போகிறீர்கள். சபைக்கென்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நீங்கள் கை தூக்கும்போதெல்லாம், நீங்கள் கேட்கும்போதெல்லாம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று விதி ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு) நான் நேரம், காலம் எல்லாவற்றையும் பார்த்துதான் முடிவு செய்ய முடியும். (குறுக்கீடு) நீங்கள் கேட்கும்போதெல்லாம் வாய்ப்புக் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, உட்காருங்கள். (குறுக்கீடு) இதற்குமேல் நீங்கள் பேசினால் நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு பேசுவதை நீங்கள் முதலில் நிறுத்துங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் கை தூக்குங்கள். வாய்ப்பு இருந்தால் தருவேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சுந்தர் பேசுங்கள்.

திரு. க. சுந்தர்: காஞ்சிபுரம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிகளில் 10 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டன. அதிலே 8 துணை மின் நிலையங்கள் செயல்பாட்டுக்கு வந்துவிட்டன. உத்திரமேரூர், திருமுக்கூடல் ஆகிய இந்த 2 இடங்களிலும் இடம் தேர்வு செய்வதிலே கால தாமதமாகிவிட்டது. உத்திரமேரூரைப் பொறுத்தவரையில், நீரடி மணித்தோட்டம் பகுதியிலே 0.61 ஹெக்டேர் நிலம் கண்டறியப்பட்டு ரூ.76 இலட்சம் கட்ட வேண்டுமென்று மாவட்ட நிருவாகம் மின்சார வாரியத்திற்குக் கடிதம் அனுப்பியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி அந்த 76 இலட்சம் ரூபாயை நாங்கள் கட்ட வேண்டுமா? ஏனென்றால், அது அதிகமான தொகை என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்.

2017 ஜூன் 15]

இருப்பினும், மேலும் காலதாமதம் ஏற்படாமல் விரைந்து, அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன். மேலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சுந்தர், மூலக் கேள்வியை நீங்கள்தான் கேட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு இன்னும் ஒரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது.*

திரு. க. சுந்தர்: *மூலக் கேள்விதான் இது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சீக்கிரம் முடியுங்கள். இன்னும் ஒரு கேள்விக்கு வாய்ப்பு தருகிறேன்.*

திரு. க. சுந்தர்: *அவர்கள் குறுக்கிட்டு உள்ளே புகுந்தால் நான் என்ன செய்வது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. க. சுந்தர்: *அந்த திருமுக்கூடல் கிராமத்திற்கும் இடம் கையகப்படுத்தப்பட்டு அதுவும் தயார் நிலையிலே இருக்கிறது. எனவே, அதையும் விரைவில் செய்ய வேண்டும். குறிப்பாக, உத்திரமேரூர் துணை மின் நிலையத்திற்கு தொழில்நுட்ப அனுமதி இதுவரை பெறப்படவில்லை. எனவே, அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, உத்திரமேரூர் பகுதியில் 0.61 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் உடனடியாக பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். திருமுக்கூடல் பகுதியைப் பொறுத்தவரையில், நிலம் இப்போதுதான் கண்டறியப்பட்டுள்ளது. அந்த நிலத்திற்கு மாவட்ட ஆட்சியர் விலை நிர்ணயம் செய்ததற்குப் பின்னால் அதற்குண்டான தொகையைக் கட்டி, அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர்*

அவர்கள் பேசுகின்றபோதே இடம் தேர்வு செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். பொதுவாக மின்சார வாரியத்திற்குத் தேவையான துணை மின் நிலையங்கள் அமைப்பதாக இருந்தாலும் சரி, மின் பாதை, பெரிய டவர்கள் கொண்டு வருவதாக இருந்தாலும் சரி, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து அங்கே போராட்டம் செய்கின்ற காரணத்தினாலேதான் இதுபோன்று தாமதம் ஏற்படுகின்றது. நேற்றைக்குக்கூட நீங்கள் செய்தித்தாளிலே பார்த்திருப்பீர்கள். கயத்தாறிலிருந்து உற்பத்தியாகின்ற மின்சாரத்தை நாம் சென்னைக்குக் கொண்டு வந்து, சென்னையில் மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் பல துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்பதற்காக டவர்களை அமைத்துக் கொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட 2,049 டவர்களில் 5 டவர்கள் மட்டும்தான் போட வேண்டியிருக்கிறது. அதற்கு உயர் நீதிமன்றத்தை அணுகி தடையாணை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணையைப் பெற்றதற்குப் பின்னால்,—துறைரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தத் தடையாணை நீக்கப்பட்டு, தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்குண்டான தொகையினையும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் செலுத்திவிட்டோம். ஆனால் நேற்று, உயர் நீதிமன்றத்தில் அது தொடர்பாக ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. "விவசாயிகளுக்கு அந்தத் தொகை சென்றடையவில்லை; அதனால், உடனடியாக மின்சாரத் துறைச் செயலாளரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் கைது செய்து அழைத்து வாருங்கள்" என்று ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகள், பொதுமக்கள் ஒத்துழைக்கின்றபொழுது தேவையான மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு எளிதாக இருக்கும். ஏனென்றால், கிட்டத்தட்ட 2,049 டவர்களில் இன்னும் 5 டவர்கள் மட்டுமே போட வேண்டிய நிலையில் சென்னைக்குக் கொண்டுவரவேண்டிய மின்சாரம் தடைபட்டு நிற்கிறது என்று சொன்னால், (குறுக்கீடு) இதுபோன்ற காரணங்களால்தான் காலதாமதம் ஆகின்றது என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீதிமன்றத் தீர்ப்பு என்றுதானே சொல்கிறார்? (குறுக்கீடு) அதில்

2017 ஜூன் 15]

ஒன்றும் தவறு இல்லை, திரு. பி.கே. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *நான் சொல்வதை முழுமையாகக் கேட்டுவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கவேண்டும். இத்தகைய காரணங்களினால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேனேயொழிய, நான் அதை ஒரு குறையாகச் சொல்லவில்லை. ஏற்கெனவே இந்தப் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்படுத்துவதில் பல்வேறு இடைஞ்சல்கள் இருந்த காரணத்தினால்தான், காலதாமதம் ஆகிவிட்டது என்று உங்களுடைய உறுப்பினரே சொன்னார். அதனால்தான், நேற்றையதினம் டவர்களை அமைக்கின்றபோது, இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. நிலத்திற்குண்டான தொகையும் விவசாயிகளுக்குக் கொடுத்தாகிவிட்டது. ஆனாலும், அந்தப் பகுதி விவசாயிகள் அந்தத் தொகை போதாது என்று போராடிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் உயர் நீதிமன்றத்தில் இதுபோன்ற வழக்குகள் வருகின்றபோது, காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது என்றுதான் நான் சொன்னேன். எனினும், அந்த இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்குண்டான இடங்களில், ஓர் இடம் தேர்வு செய்யப்பட்டது, இன்னொரு இடம் கிட்டத்தட்ட கையகப்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் இருக்கிறது. கூடிய விரைவில் அவற்றை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உயர் நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கு குறித்து நான் அவையில் பேசுவதில்லை. நிச்சயமாக அவையினுடைய மரபை நான் மீறமாட்டேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்தானே சொல்லியிருக்கிறார்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய உறுப்பினர் கேட்ட*

கேள்விக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. பி.கே. சேகர்பாபு, உட்காருங்கள். இதுவெல்லாம் ஒரு பொருள் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. க. சுந்தர், நீங்கள் இன்னொரு துணைக் கேள்வியைக் கேட்கவில்லையா? (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் அமைதியாக இருங்கள். அவர்களை நான் கட்டுப்படுத்திக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நீங்கள் சற்று அமைதியாக இருங்கள். அவர்களை நான் பார்த்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதி, கருங்கல் பேரூராட்சி பகுதியில் கருங்கல் துணை மின் நிலையம் செயல்பட்டு வருகிறது. அந்த மின் நிலையத்திலிருந்து தேங்காபட்டணம் மீன்பிடித் துறைமுகத்திற்கு மின்மாற்றிமூலம் மின்சாரம் அதிகமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. எனவே, கருங்கல் பகுதியில் மின்னழுத்தக் குறைபாடு ஏற்படுகிறது. எனவே, கருங்கல்லில் செயல்படுகின்ற 110 கே.வி. துணை மின் நிலையத்தை 230 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு தங்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் மின்னழுத்தம் எந்தளவிற்கு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். 110 கே.வி. துணை மின் நிலையம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கிறார். அதனை 230 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். அந்தளவிற்கு அந்தப் பகுதியில் மின் பளு இருக்கிறதா என்று ஆராய்ந்து, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.